செ.வெ.எண் : 472

21/7/2011

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை இன்று (21.7.2011) தலைமைச் செயலகத்தில், புது டெல்லியிலுள்ள இந்தியாவிற்கான இலங்கை நாட்டின் தூதர் மேதகு திரு. பிரசாத் கரியவாசம் அவர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின் போது, பாக் ஜலசந்தியில் மீன் பிடிப்பில் ஈடுபடும் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் அவ்வப்போது தாக்கப்படுவது தனக்கு மிகவும் கவலை அளிப்பதாகத் தெரிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அவ்வாறான சம்பவங்கள் இனி நடைபெறாமல் இருக்க வேண்டும் என்று இந்தியாவிற்கான இலங்கை தூதரிடம் கேட்டுக் கொண்டார்கள். கடந்த இரண்டு மாதங்களில் மூன்று முறை தமிழக மீனவர்கள் சிறைப்பிடிக்கப்பட்ட சம்பவங்களைச் சுட்டிக் காட்டிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழக மீனவர்கள் துன்புறுத்தப்படுவது முற்றிலும் தடுக்கப்பட வேண்டும் என்று இந்தியாவிற்கான இலங்கை தூதரிடம் வலியுறுத்தினார்கள்.

இலங்கை முகாம்களில் தங்கியுள்ள தமிழர்கள் தங்கள் சொந்த இடங்களுக்கு விரைவில் திரும்பிச் சென்று மறுவாழ்வு பெறுவதை இலங்கை அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்ற தன்னுடைய விருப்பத்தையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இந்தியாவிற்கான இலங்கை தூதரிடம் தெரிவித்தார்கள்.

மேலும், தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்படுவது மற்றும் சிறைபிடிக்கப்படுவது போன்ற சம்பவங்கள் தடுக்கப்பட வேண்டும்; மற்றும் இலங்கை முகாம்களில் உள்ள தமிழர்கள் விரைவாக முழு மறுவாழ்வு பெற வேண்டும் என்ற தனது விருப்பத்தை இலங்கை அதிபரிடம் தெரிவிக்குமாறும் இந்தியாவிற்கான இலங்கை தூதரை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

இந்தச் சந்திப்பின்போது, தென்னிந்தியாவிற்கான இலங்கை துணை தூதர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி, இலங்கை துணை தூதரகத்தின் உயரதிகாரி திரு. அமீத் அஜ்வாத் ஆகியோர் உடன் இருந்தனர்.

******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9

நாள் : 21.7.2011